1971 அக்டோபர் 21]

மீன்பிடி படகுகள்.

*** 5 வினா—திரு. ஏ. எம். இராஜா :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாடு அரசு புதிதாக ஆழ்கடல் மீன்பிடி கப்பல் (Trawlers) வாங்க உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், எத்தனை வாங்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) 57 அடி நீளமுள்ள நான்கு உருக்கு இழு படகுகளை வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சர் அவர்கள் ஆழ்கடல் மீன் பிடிக் கப்பல் வாங்குவதற்கு அரசு உத்தசித்துள்ளது என்றூர்கள். எத்தனை வாங்க இருக்கிறூர்கள் ? அவை எப்போது தமிழகத்திற்கு வந்து சேரும்? இன்னும் தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடிக்கிற துறைமுகங்களைப் புதியதாக ஏற்படுத்தப் போவதாகச் செய்தி வந்திருக்கிறது. ஆகவே, ஆழ்கடல் மீன்பிடிக் கப்பல்களை அதிகமாக வாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா ? விரைவில் அவற்றைக் கொண்டுவரவும் ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான்கு படகுகள் 36 லட்சம் ரூபாயில் வாங்கத் திட்டமிட்டு, கல்கத்தாவில் இருக்கிற இரண்டு கம்பெனிகளுக்கு ஆர்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதில் இரண்டு படகுகள் விரைவில் வந்து சேரும். மற்ற இரண்டும் கட்டிவிட்டதாகத் தெரிகிறது.

Andrew Yule Company, Calcutta—2 trawlers.

East Bengal River Steam Services, Limited, Calcutta—2 trawlers.

திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி : மீனவர்களுக்காக வாங்கக் கூடிய படகு அவர்களிடையே ஏற்படுகிற சச்சரவின் காரணமாக அழிக்கப்படுகிறது. அப்படி அழிக்கப்படாமல் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மீனவர்களுக்காக கொடுக்கப்படுகிற படகு வேறு, இது வேறு. மீனவர்களுக்குக் கொடுக்கப்படுகிற படகுகள் இன்ஷ்யூர் செய்யப்படுவதால் ஒருவித பாதுகாப்புக்கு உட்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஆழ்கடலில் மீன்பிடிக்க ஆறு படகுகள் வாங்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னூர்கள். அந்த ஆறு படகுகள் எந்த எந்தப் பகுதியில் அமர்த்தப்படப் போகிறது ? குளச்சல் போன்ற பகுதிக்கும் ஒரு படகு வழங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான்கு படகுகள் என்றுதான் சொன்னேன். மண்டபம் பகுதிக்கு இரண்டும், தூத்துக்குடிக்கு ஒன்றும், சென்னைக்கு ஒன்றுமாக இவை வழங்கப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : அமைச்சரவர்கள் குறிப்பிட்டதுபோல இப்படி வாங்கப்படுகிற படகுகள் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுக்கப்படுமா? அல்லது அரசாங்கத் தரப்பிலேயே வைத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசாங்கமே நடத்தும். இவை மீன்பிடிப்பதில் ஈடுபடுவதைவிட-மீன் வளம் இருக்கும் பகுதிகளை ஆய்வு செய்வதிலேயே ஈடுபடும். இந்தப் படகுகளினால் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிகளில் மீனவர்களும், மற்றவர்களும் மீன் பிடிப்பதில் ஈடுபடுவார்கள். இத்தகைய ஆய்வைப் இப் படகுகள் மூலம் அரசுத் துறையே ஏற்று நடத்தும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : விசைப் படகுகள் பல மீனவர்களுக்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். விசைப்படகுக்காரர்களுக்கும், மற்ற சாதாரணப் படகுக்காரர்களுக்கும் அடிக்கடி கருத்து முரண்பாடு ஏற்பட்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் சச்சரவுகள் ஏற்பட்டு வருகின்றனவே, அதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஆண்டுக்கு 150, 200 விசைப் படகுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. விசைப் படகுக்காரர்களுக்கும், கட்டுமர மீன்பிடிக்காரர்களுக்கும் தகராறு ஏற்படுவதற்குக் காரணம், அவர்களுக்குள் வகுப்பட்டிருக்கிற எல்லையை மீறுவதுதான். 12 மைலுக்கு அப்பால் சென்று பிடிக்க வேண்டும் என்கிறபோது, நமது கடலில் ஜப்பானியர்கள் கூட வந்து பிடிக்கிறார்கள், ருஷ்யர்கள் பிடிக்கிறார்கள், நாம் ஒன்றும் செய்ய முடியவில்லை. இப்படி விசைப் படகுகளை உபயோகிப்போர் எல்லையை மீறுகிறபோதுதான் அசம்பாவித நிகழ்ச்சிகள் ஏற்படுகின்றன.

திரு. என். கணபதி : இப்படி ஆழ்கடல் மீன் பிடிக்கப்பல்களை வாங்குகிற நோக்கில் பிடிக்கிற மீன்களைப் பதனிட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்கிற உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா? அப்படி இருந்தால் எவ்வளவு வருமானம் கிடைக்கக் கூடும் என்று எதிர்பார்க்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போதே ஆண்டுக்கு 2½ கோடி ரூபாய், 3 கோடி ரூபாய் வருமானம் விரால் மீன் ஏற்றுமதி மூலம் வருகிறது. இன்னும் இந்த ஆழ்கடல் மீன் பிடிப்புக்கு உதவியாக இந்தப் படகுகள் வந்தால் மீன்கள் இருக்கும் இடம் ஆய்வு செய்யப்பட்டு, மீன் பிடிப்பதன் மூலம் அதிக வருமானம் கிடைக்கலாம்.

1971 அக்டோபர் 21]

திரு. கா. வேழவேந்தன் : வங்காள விரிகுடாவில் சுறு மீன் அதிகமாயிற்றே, அவற்றைப் பிடித்து தமிழகத்திலேயே ஷார்க் லிவர் ஆயில் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : சுறு மீன் மாத்திரம் அல்ல-அதிக லாபம் தரக்கூடிய எல்லாவகை மீன்களையும் பிடிக்க, நல்ல முறையில் ஆய்வு செய்யப்படும். அதற்காகவே படகுகள் வாங்குகிறோம். இதனால் அதிக லாபம் கிடைக்கும் என்றே அரசாங்கம் கருதுகிறது.

Price of coffee in hotels

*6 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the steps taken by the Government to reluce the price of coffee in the hotel ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஓட்டல்களில் விற்கப்படும் காப்பி விலையைக் குறைக்க அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டது :

(அ) காப்பிக்கொட்டை உற்பத்தி குறைந்ததனாலும், அதன் காரணமாக நாட்டில் விற்பனைக்காக காப்பிக்கொட்டை குறைந்த அளவு வழங்கப்பட்டதனாலும், 1970-ஆம் ஆண்டில் காப்பிக் கொட்டை விலை உயர்ந்தது. காப்பி வாரியமும் தனது விற்பனை நிலையங்கள் மூலமாக காப்பிக்கொட்டை விற்பனை செய்வதை நிறுத்தியிருக்கிறது. இது குறித்து அரசு உடனடியாக இந்திய அரசுக்குக் கடிதமெழுதியது. காப்பி வாரியமும் விற்பனை நிலையங்கள் மூலமாக விற்பனை செய்வதை 1-1-71 முதல் மீண்டும் தொடங்கியது. தற்போது காப்பிக்கொட்டை தாராளமாக வழங்கப்படுகிறது. அத்துடன் விலையும் குறைந்துள்ளது.

(இ) 27-8-70 அன்று ஓட்டல் அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் கூட்டம் ஒன்று நடந்தது. காப்பி விலையைக் குறைப்பதன் அவசியம் பற்றி வலியுறுத்தப்பட்டது. காப்பி விலை கோப்பை ஒன்றுக்கு 30 காசிலிருந்து 25 காசாகக் குறைந்தது.

(உ) ஓட்டல் அதிபர்கள் சங்கத்திற்கு காப்பிக் கொட்டை வழங்கும் 11-9-70 அன்று பெங்களூர், காப்பி வாரியத்திற்கு எழுதப்பட்டது. ஓட்டல் அதிபர்கள் சங்கத்திற்கு காப்பிக்கொட்டை தம்மால் வழங்க இயலாது என்று காப்பி வாரியம் தெரிவித்துள்ளது. சங்கத்தினர் தொகுதி அனுமதியைப் பெற்று, ஒவ்வொரு திங்களும் நடத்தப்படும் தொகுதி ஏலத்தில் பங்கு கொண்டு தமக்குத் தேவைப்படும் காப்பிக்கொட்டையை வாங்கிக் கொள்வதற்கு தமக்கு ஆட்சேபணை எதுவுமில்லை என்றும் வாரியம் தெரிவித்துள்ளது. ஓட்டல் அதிபர்கள் சங்கத்திற்கு இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : காப்பி காம்போனன்ட்ஸ் விலை குறைந்தால்தான் காப்பி விலை குறையும். ஆகவே அவற்றின் விலையைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?